[1994 ஏப்ரல் 29

457 —

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், விக்கிரமசிங்கபுரத்திற்கு குடிநீர் வழங்குதல்.

***21260—திரு. ஆர். முருகையா பாண்டியன் :**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி – கட்டபொம்மன் மாவட்டம், விக்கிரமசிங்கபுரம் நகரத்தில் 14-வது, 15-வது வார்டு பகுதிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் கிடைக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு குடிநீர் வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி – கட்டபொம்மன் மாவட்டம், விக்கிரமசிங்கபுரம் நகர பேருராட்சியில் ஏற்கனவே விடுபட்ட தெருக்களுக்கும், 14-வது, 15-வது வார்டுகளுக்கும் குடிநீர் வழங்க குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14, 15 வார்டு என்பது, விக்கிரமசிங்கபுரத்தினுடைய பேரூராட்சியினுடைய குக்கிராமங்களைச் சேர்ந்த பகுதிகளாகும். இந்தப் பகுதிகளிலே, சாதாரணமாக குடிநீர் இல்லாமல் கஷ்டப்பட்டு வந்தார்கள். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்றபிறகு, இந்தக் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுவதற்காக குடிநீர் சம்பந்தப்பட்ட வேலைகள் துவக்கப்பட்டன. ஆனால், இந்த வேலைகளிலே சமீபகாலமாக கொஞ்சம் தொய்வு ஏற்பட்டிருக்கிறது. என்ன காரணம் என்று கேட்டால் பைப்புகள் வரவில்லை, குழாய்கள் வரவில்லை என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொல்கிற காரணத்தால் வேலை தாமதப்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட பைப்புகளை வாங்கிக் கொடுத்து, வேலையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 29]

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற அந்த இரண்டு பகுதிகளுக்கும் இன்றைக்கு பணிகள் துவங்கப்பட்டுவிட்டன. கடந்த ஆண்டு இந்தக் குழாய்கள் கிடைக்கப்பெறாத நிலை இருந்து வந்தது. இந்த ஆண்டு அது நிவர்த்தி செய்யப்பட்டு தமிழகத்திலேயிருக்கிற அனைத்துப் பகுதிகளுக்கும் முறையாக, மெட்டீரியல்ஸ் என்று சொல்கின்ற குழாய்கள் மற்றும் மோட்டார்கள் கிடைக்கப்பெற்று வழங்கப்பட்டிருக்கின்றன. கூடியவிரைவில் அந்தப் பணி முடிக்கப்பட்டு செயலாக்கத்திற்கு வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 14, 15 வார்டு என்பது பல கிராமங்களைக் கொண்டது. இருந்தாலும்கூட, அந்தத் திட்டம் தயார் செய்யும்போது பல ஆண்டுகளுக்கு முன்னாலே ஆய்வு செய்யப்பட்டது. இப்பொழுது அதிலே பல குடியிருப்புகளும் புதியதாகத் தோன்றியுள்ளன. அதேபோன்று அந்த விக்கிரமசிங்கபுர நகரத்திற்குள்ளாகவே பல தெருக்களும் விடப்பட்டுள்ளன. இதையெல்லாம் சேர்த்து, இந்த ஆண்டு திட்டத்திலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் சம்பந்தப்பட்ட பொறியாளரிடத்திலே கேட்ட நேரத்தில், மதிப்பீட்டிலே பணம் இருக்கிறது, எனவே அதை செய்து முடிக்கிறோம் என்று உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள். மேலும் இந்தத் திட்டத்தில் விட்டுப்போன தெருக்களையும் இதோடு சேர்த்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றி, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலே, இந்த வருட கடைசிக்குள்ளாக, அந்தப் பொதுமக்களுக்குத் தண்ணீர் கொடுக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தருவார்களா ? அந்தத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்து பொதுமக்களுக்கு அர்ப்பணிக்கின்றவகையிலே, அந்த விழாவிலே கலந்துகொண்டு திறந்து வைக்க வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற அந்தப் பகுதிகளுக்கும் புதியதாக உருவாகியிருக்கின்ற குடியிருப்புகள் பகுதிகளுக்கும் இப்பொழுது பணிகள் தொடங்கியிருக்கின்றன. காரணம் சுமார் 24 கிலோ மீட்டர் அளவிற்கு விடுபட்ட மற்றும் புதிய பகுதிகளுக்காக பதிமானக் குழாய்கள் எல்லாம் பதிக்கப்பட்டு இன்றைக்குப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தப் பகுதியைப் பொறுத்தவரை ஒரு வார்டுக்கு அகஸ்தியர்புரத்திலும், 15-வது வார்டுக்கு மேட்டுத்தங்கம்மன்

கோவில் அருகிலும் நீர்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன. ஆகையினால், அபிவிருத்தி அடைகின்ற பகுதிகளுக்கும் இந்தத் திட்டம் செயலாக்கத்திற்கு விடப்படும். கூடியவிரைவிலே உங்களுடைய கோரிக்கையை கருத்திலே எடுத்து போர்க்கால அடிப்படையிலே இந்தப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு இந்த ஆண்டிலே குடிநீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 458, செல்வி கோ. மல்லிகா, இருக்கையில் இல்லை.

வினா எண் 459, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

459 —

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடர் மாணவ விடுதிகளின் விவரம்.

***22243**—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :*

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிட மாணவர் விடுதிகள் மற்றும் மாணவியர் விடுதிகள் எத்தனை ?

(ஆ) இதில் சொந்தக் கட்டிடம் உள்ள விடுதிகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலே 17 ஆதி திராவிடர் நல மாணவர் விடுதிகளும், 6 மாணவியர் விடுதிகளும் ஒரு கல்லூரி மாணவர் விடுதியும் உள்ளன.

(ஆ) இதில் 4 விடுதிகள் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு 17 மாணவர்கள் விடுதிகளும், 6 மா்ணவியர் விடுதிகளும், ஒரு